101

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௮.	1919ஆ அக்டோபர்மீ	பகுதி ௧௰.
	,, நவம்பர்மீ	,, ௧௧.
	,, டிசம்பர்மீ	,, ௧௨.

தசபுராணம்.

உயர்தவ மிக்கதக்க னுயர்வேள்வி தன்னி லவியுண்ண வந்த விமையோர்
பயமுறு மெச்சனங்கி மதியோனு முற்றபடி கண்டுநின்று பயமாய்
அயனொடு மாலுமெங்க ளறியாமையாதி கமியென்றிறைஞ்சி யகலச்
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ண னெந்தை கழல்கண்டு கொள்கை
கடனே.

(இ-ள்) உயர் தவம் மிக்க = உயர்ந்த தவத்தால் மிகுந்த, தக்கன் = தக்கனது, உயர்வேள்வி தன்னில் = மிக மேலாகிய யாகத்தில், அவி = அவிர்ப்பாகத்தை, உண்ண வந்த = உண்ணும்படி வந்த, இமையோர் = தேவர்களில், பயமுறும் = பயனைப்பெறும், எச்சன் = விஷ்ணுமூர்த்தியும், அங்கி = அக்கினியும், மதியோன் = சந்திரனும், உற்றபடி = அடைந்த விதத்தை, கண்டுநின்று = நிலையாகப்பார்த்து, பயமாய் = பயந்து, அயனொடும்

மாலும்=பிரமனோடு விஷ்ணுமூர்த்தியும், எங்கள்=எங்களுடைய, அறியாமை=அறிவிலாமையை, ஆதி=ஓ தலைவனே கமி=நீ பொறுத்துக் கொள்வாய், என்று இறைஞ்சி=என்று வணங்கி, அகல=அவ்வெள்ளியை விட்டு நீங்கவும், சயமுறுதன்மைகண்ட=சயத்தினை யடையவும் செய்த, தழல்வண்ணன்=தீப்போலும் திருமேனியை யுடையானாகிய, எந்தை=எமது தந்தையாகிய சிவபெருமானது, கழல்=திருவடிகளை, கண்டு=தரிசித்து, கொள்கை-மனத்துக்கொள்ளுதல், கடன்-முறையாகும். ஏ-அசை.

பிரமபுத்திரர்களில் ஒருவனாகிய தக்ஷன்என்பான் சிவபெருமானைநோக்கித்தவஞ்செய்துஅம்மூர்த்தி பிரத்தியக்ஷமாதலும் தனக்கு உமையேகுமாரியாக வருதல்வேண்டும் என்றும் அச்சிவமூர்த்தியே மருமகனாக வருதல்வேண்டும்என்னும்வரத்தினையடைந்து உமாதேவியாரைப் புத்திரியாகப்பெற்று தாக்ஷாயணி எனப்பெயரிட்டு அன்புடன்வளர்த்துச் சிவபெருமானுக்குத்திருமணஞ்செய்து கொடுத்தனன். இத்தக்கன் ஓர்நாள் தன்குமரியைக் காணவிரும்பித் திருக்கைலைக்குச்செல்லுதலும் பூதகணங்கள் அவனைத் தடுக்க அதனால் போகாது திரும்பி மிகக் கோபங்கொண்டவனாய் ஓர் யாகம செய்து சிவபெருமானை யழையாது அவமதித்தல்வேண்டும்என்று எண்ணி மற்றைத் தேவர்களையெல்லாமழைத்து விஷ்ணுவைத் தலைவராக்கி யாகத்தைச்செய்ய ஆரம்பித்தனன். அக்காலத்து அங்கு வந்திருந்த ததீசிமுனிவர் சிவபெருமானது பரத்துவத்தை யெல்லாம் தக்கனுக்கு எடுத்துக் கூறி முதலில் சிவபெருமானுக்கு அவிகொடுத்து மற்றையத் தேவர்க்குத் தருதல்வேண்டும் என்று புகன்றனர். ஊழ்வலியின் வண்ணம் தக்கன ததீசியினது புத்திபோதிப்பைக் கேளாது உங்கள் சிவபெருமான் தாமதகுணமுடையவன் என்று பழி கூறுதலும் ததீசிமுனிவர் மிகுதியும் கோபங்கொண்டாராய் ஓ தக்கனே எங்கள் சிவபெருமான் மற்றைய மூர்த்திகளைப்போல் முக்குண வயத்தராய் இல்லாது இயல்பாகவே சிற்குணத்தராய்ச் சங்காரத்தொழில் நிமித்தம் தாமதகுணத்தைச் செயற்கையாகவே உடையவர் என்று கூறினர். அதனைக்கேட்ட தக்கன் செல்வச் செருக்கால் அவர் சொற்களை யதியாது சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் கொடேன் என மறுத்ததுடன் முனிவரையும் அவ்விடம் விட்டு நீங்கும்படிக் கூறினன். ததீசிமுனிவர் கோபங்கொண்டாராய ஓ தக்கனே உனது யாகம் அழியக்கடவது என்றுசபித்து, முனிவர்கூட்டங்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கினர். முனிவர் செல்லுதலும்,

யாகம் அழியும்படியான கொடியறுதல் முதலிய பலதுன்னிமித்தங்கள் தோன்றின. தக்கன் வேதவிதியிற் சிறந்த சிவபெருமான் மந்திரங்களை யொழித்து விஷ்ணுவுக்குரிய மந்திரங்களை யோதி யாகத்தை வளர்க்கக் கட்டளையிட்டான். அவ்வாறே யாகம் முடிந்ததும் அங்குள்ள தேவர்கட்கு அமுதினும் சிறந்த அவியைக்கொடுத்தும சிவபெருமான் இல்லாது முடிந்ததொன்றாதலால், உண்டவர் எல்லோர்க்கும் அது நஞ்சுபோலத்தோன்றிற்று. இதனை யறிந்த நாரதர் கைலைக்குச் சென்று இறைவனுக்கு அறிவித்தனர். உடனே உமையவள் எழுந்து வணங்கி ஓ யெம்பெருமானே எந்தந்தையார் செய்யும் யாகத்தைப் பார்த்துவரும்படி விடைதரல்வேண்டும் என்று பிரார்த்தித்தனர். சிவபெருமான் நம்மிருவரையும் மதியாது நடத்தும் யாகத்துக்குப் போதலாகாது, என்று அருள்செய்தலும் உமையம்மை போதற்கு மிகவிரும்புவதைத் திருவுளத்துஎண்ணிய சிவபெருமான் விடைகொடுத்தனுப்பினர். உமாதேவியார் மிகச் சிறப்புடன் விமானமேறிச்சென்று தக்கன் யாகசாலையில் பிரவேசித்தனர். தாக்ஷாயணியைக்கண்ட தக்கன் நான் உங்களைப் பார்க்கவந்தபோது உனது கணவனாகிய பித்தன் பூதகணங்களால் என்னைத் தடுத்து அவமானப்படுத்தினன் ஆதலால் நீ இங்கே வருதல் ஆகாது என்று கோபித்தனன், தேவியார் மனங்கொதித்து பெருமூச்செறிந்தனர். அக்கோபத்தால் எல்லா வுலகங்களும் அவ்வுலகங்களுட்பட்ட வுயிர்களும் தம் நிலை குலையக்கண்ட விமலையென்னுந் தோழியானவள் தலைவியினது கோபத்தைத் தணியச்செய்தனள். தலைவியும் கோபம்நீங்கித் தக்கனை நோக்கி என்னை நீ இகழ்ந்தது எனக்கு ஓர் குற்றமன்று. ஆயின், பரமதயாநிதியாய் உள்ள பரசிவப்பிரானை நீ நிந்தித்தாயாதலால் நீ செய்யும் யாகமும் நிறைவேறாது. நீயும் நசிப்பாய் என்று சபித்து விமானமேறிக் கைலையை யடைந்து சிவபெருமான் சந்நிதியில் வணங்கி ஓ யெம்பெருமானே! என் பிதாவாகிய தக்கன் என்னையே யன்றித் தேவரீரையும் நிந்தித்தானாதலால் அவன் செய்யும் வேள்வியை அழிக்கத் திருவுளங்கொள்ளல் வேண்டும்என்று வேண்டினள். இறைவியின் திருவுள்ளப்படி முடிக்கத் திருவுள்ளங்கொண்ட சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றும் வீரபத்திரர்தோன்றித் தொழுதுநின்றனர். அப்போதே தேவியாருடைய கண்ணினின்றும் காளி தோன்றி வீரபத்திரருக்கு அருகே நின்றனள். அவ்விருவரையும் சிவபெருமான் நோக்கி தக்கன் எம்மையொழித்து ஒரு யாகம் செய்கின்றான். அங்கு நீவிர் சென்று எமக்குத் தரவேண்டிய அவியைக்கொடுப்பானாயின், வாங்கி வரு

தல்வேண்டும், மதப்பாணுவின் யாகத்தை யழித்து அங்குள்ள தேவர்களையும் துன்புறுத்தி வாருங்கள் என்று கட்டளையிட்டனர். அவ்விருவரும் அனேகபூதங்களையும் வீரர்களையும் திரட்டித்து அவர்கள் தம்மைச்சூழ்ந்துவர யாகசாலையை யடைந்து யாகசாலையினின்றும் யாரும் வெளியிற் போகாவண்ணம் பூதத்தலைவர்களைக்காவலிட்டு யாகசாலையின் ஓமகுண்டத்தையணுகினர். இவர் வருகையைக் கண்ட திருமால் முதலியோர் திடுக்கிட்டனர். தக்கன் தயங்கிநின்று சற்றுத் தெளிந்த பின், நீயார் உன் வருகைக்குக் காரணம் என் என்று வினவுதலும் வீரபத்திரர் புன்னகை கொண்டு நான் பரமசிவனது புதல்வன் நீசெய்யும் யாகத்தில் அவர்க்குரிய அவிர்ப்பாகத்தினை வாங்கிச் செல்ல இங்குவந்தேன் என்றனர். தக்கன் சுடலையாடியாகிய அச்சிவனுக்கு அவிர்ப்பாகமும் வேண்டுமோ கூடாது என்றனன். வீரபத்திரர் அங்கு இருந்த விஷ்ணு முதலியவரை நோக்கி தலைவராய சிவபெருமானுக்கு அவிகொடாது மறுப்பது உங்கட்கு சம்மதிமோ என்னலும் அத்தேவர்கள் ஒன்றும் பேசாது ஊமைபோல் நின்றனர். வீரபத்திரர் உடனே வெகுண்டு தமது கையிலிருந்த கதாயுதத்தால் கேசவனை மோதி மூர்ச்சையடைவித்தும் பிரமனைச் சிரத்தில் குட்டி கீழேவீழ்த்தியும் சந்திரனைக் காலால்தேய்த்துச் சாய்ந்துபோகச்செய்தும் சூரியனைப் பற்கள்பலபலவென உதிரும்படி உதைத்தும் சனியைக்கண்பறித்துக் குருடாக்கியும் யமனைச் சிரமறுத்து வீழ்த்தியும் குயிலாகப்பறந்து சென்ற இந்திரனைத் தண்டித்தும் இவ்வாறே மற்றைய தேவரையும் தண்டம்புரிந்து நின்றனர். இவற்றை யெல்லாங்கண்ட தக்கன் மனம்வருந்தித் தைரியங்கொண்டு தனது கேடயத்தையும் வாளையும் கையிற்பற்றி எதிரே வந்தனன் அவன் வருகையைக்கண்ட வீரபத்திரர் வடவைத்தீபோல்கொதித்து தமதுவாளாயுதத்தால் அவன்சிரத்தை யறுத்துத்தள்ளினர். அச்சிரத்தினை அங்குநின்ற ஓர் பூதம் எடுத்து விழுங்கினது. இவையெல்லாங் கண்ட அவன் மனைவியாகிய வேதவல்லியென்பாள் மார்பிலறைந்து அழுதலும் உடன்சென்ற காளியானவள் அவளைச் சிகையறுத்தும் மற்றவரைப் பலவகையாகத் தண்டித்தும் வீரபத்திரரோடு வந்து நின்றனள். பிறகு திருமால் வீரபத்திரரோடு யுத்தஞ்செய்யக்கருதித் தமது சாரங்கத்தை வளைத்து அனேக பாணங்களை வீரபத்திரரின் மீது ஏவ அவை பயன்படாது தோல்வியடைந்தாராய் வீரபத்திரரது ஆற்றலைப் புகழ்ந்து அவரை மகிழும்படிச் செய்தனர். இவ்வமயத்துச் சிவபெருமான் பராசத்தியோடு இடபவாகனத்தில் ஏறி வீரபத்திரர் இருக்கும் யாகசாலையில் எழுந்தருளி

னர். அருட்கடலாகிய பராசத்தியானவர் அங்கு இறந்து கிடக்கின்ற தக்கன் முதலியோரையும் யாகத்தின் அலங்கோலத்தையும் திருக்கண் சார்த்தி இரக்கமுற்று இறைவனைநோக்கி இறைவனே இவ்வளவும் என்னால் உண்டாயின என்று உலகம் பழியாதவண்ணம் இவ்வுயிர்களெல்லாம் உயிர்த்தெழும்படி தேவரீர் திருவருள் செய்தல்வேண்டும் என்று பிரார்த்தித்தனர். பரமனும் வீரபத்திரரைக்கொண்டு அவ்வாறே உயிர்ப்பித்தனர். அப்போது பிரமன் அக்கூட்டத்தின் தக்கனைக்காணமல் வருந்திச் சிவபெருமானை வணங்கி எம்பெருமானே எனது குமாரனாகிய தக்கனையும் உயிர்ப்பித்தல் வேண்டும் என்று வணங்கவும் பெருமான் வீரபத்திரரை நோக்கினர். அவரும் பானுகம்பனால் அத்தக்கனுடைய தேகத்தைத் தேடிக் கொண்டு வரும்படிச்செய்து அவியின்பொருட்டு அறுக்கப்பட்ட ஆட்டின் தலையை அத்தேகத்திற்பொருத்தித் தக்கனையுயிர்ப்பித்தனர். எழுந்த தக்கனும் பரசிவப் பிரபுவைத் தரிசித்து வணங்கி நின்றனன். அருட்கடலாகிய இறைவனும் அத்தக்கனுக்குக் கிருபைபுரிந்து மற்றைத்தேவர்களை அவரவர்களது இருக்கைக்குச் செல்லும்படி ஏவினர் என்பது புராண கதையாம்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேத சிவாகமங்கள்.

வேத சிவாகமங்கள் சிவவாக்கெனப்படும். பிரம்ம மகா சிருட்டி யாரம்பத்திலே சிவபெருமானுடைய அபின்னசத்தியாகிய பராசத்தி குடிலையை நோக்கியபோது, அதில் நின்று வேதசிவாகமங்கள் நாதவடிவாயும் விந்து வடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் தோன்றினவென்று இருக்குவேதத்திலே சொல்லப்படுகின்றது.

இவற்றைப் பின்னர்ச் சொற்களான் இயைத்துப் பக்குவான்மாக்களுக்கு உபதேசிக்குமாறு, சிவபெருமான் சாதாக்கிய தத்துவத்திலே சதாசிவ மூர்த்தியாக எழுந்தருளியிருந்துகொண்டு, தமது திக்கு நோக்கிய நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும், உச்சிமுகத்தால் ஆகமங்களையும் அருளிச்செய்தார் என்று ஆகமங்களிலே சொல்லப்பட்டுளது.

பிரபஞ்சம் எல்லாம் சுத்தவடிவினதாகிய ஓசையிலிருந்தே பிறந்தன என்னும் எங்கள் சமயக்கொள்கை, இப்போது பௌதிக சாத்திர பண்டிதர்களாலும் (Scientists) ஒத்துக்கொள்ளப்படுகின்றது. இந்த ஓசை எழுத்தோசையும் இசை ஓசையும் என இருதிறப்படும். இவற்றுள், எழுத்தோசையாவது விந்து காரணமாகத் தோன்றுவது. இசை ஓசை ஆகாயங்காரணமாகத் தோன்றுவது. எழுத்தோசையை "வர்ணாத்மகசத்தம்" என்றும் இசை ஓசையைத் "தொனியாத்மகசத்தம்" என்றும் வடநூலார் வழங்குவர். விந்து காரணமாகப் பெறப்படும் எழுத்தோசை எமக்குப் புலனாகிடத்து, ஆகாயவாயிலாகப் புலப்படும் இசையோசையும் உடனிகழும். ஆயினும் எழுத்தோசை இசை ஓசையின் வேறேயாம். எழுத்தோசையைப் புலப்படுத்துவது இசை ஓசையும், இசை ஓசையாற் புலப்படுவது எழுத்தோசையுமாம். இவ்வேறுபாடு பற்றியே, கடலோசை முகிலோசையின எழுத்தோசை ஆகா என்றும் "மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி எழுத்து" என்றும் இவற்றின் பேதத்தை ஆப்தர்கள் வேறுபடுத்திக் காட்டுவர். எழுத்தைப் பிறக்குமிடத்து அங்காப்பு முதலிய அகமுயற்சியாற் பெறப்படும் சூக்கும ஓசை எழுத்தோசை எனவும், எடுத்தல், படுத்தல் முதலிய புறமுயற்சியாற் பெறப்படும் தூல ஓசை இசை ஓசை எனவும் படும். இவ்வேறுபாடு பற்றியே எழுத்தோசையை வயிந்தவ ஓசை என்றும் இசை ஓசையைப் பௌதிக ஓசை என்றும் ஆகமங்கள் எடுத்து விளக்கும். எனவே, எழுத்தோசையாகிய வயிந்தவ ஓசையின் தோற்றம் இசை ஓசையாகிய பௌதிக ஓசையின் தோற்றத்துக்குப் பெரிது முற்பட்டதென்பது தெள்ளிதிற் போந்திடும்.

சத்தப்பிரபஞ்சமாகிய நாததத்துவமே முதற்கட்டோன்றி, அதனிடத்திருந்தே ஏனைத்தத்துவ தாத்துவிகங்களாகிய அர்த்தப் பிரபஞ்சமெல்லாம் தோன்றின என்பது எமது சமயக்கொள்கை யாதலாலும் இந்தக் கொள்கை இந்தக் காலத்திலே பெரிது அனுமானிக்கப்படும். பௌதிக சாத்திர மரபுக்கும் அங்கீகாரமான தொன்றாதலாலும், நாதவிந்து வடி

வினவாகிய எமது வேதசிவாகமங்கள், உயிர்த்தோற்றங்கள் அனைத்துக்கும் முற்பட்டன என்பது நன்கு போந்திடும். ஆகவே, சீவதோற்றங்கட்கெல்லாம் முற்பட்ட வேத சிவாகமங்களுக்கு, அந்தச் சீவர்கள்பால் தோற்றங் கற்பித்தல் ஒரு சிறிதும் பொருந்தாதாம்.

ஆதிக்கட்டோன்றிய சத்தப்பிரபஞ்சத்திலிருந்து அர்த்தப் பிரபஞ்சம் தோன்றியபின்னர் அந்த அர்த்தப் பிரபஞ்சத்துட்பட்ட சீவர்களது சேட்டை காரணமாக, பற்பல விகற்பங்கள் அந்தச் சத்தப் பிரபஞ்சத்திற் காணப்படும். இதுகொண்டு சத்தப்பிரபஞ்சம் அனைத்தும் அர்த்தப்பிரபஞ்சத்துக்குப் பிற்பட்டதென்பது அமையாது. வெற்றுநீர் காரணமாகத் தோன்றிய பாசி, பின்னர் அந்த நீரை விகாரப்படுத்துதல் பற்றி நீர் பாசிக்குப் பிற்பட்டதென்பது கூடாது.

கடவுள் ஒருவர் உளர் என்றும், அந்தக் கடவுள் தாமே எம்மைச் சிருட்டித்தார் என்றும் நாம் விசுவசிப்பதுண்டானால், அவர் எம்மைச் சிருட்டித்தபோது எமக்குப் பேசுந்திறமையைத் தந்தே படைத்தார் என்றும், அங்ஙனம் தந்தார் என்றால், அந்தத் திறமையை நாம் உபயோகித்தற்கமைந்த கருவியாகிய பாஷையையும் தந்தார் என்றும் நாம் விசுவசித்தல்வேண்டும். இங்ஙனமின்றி, கடவுள் நம்மைச் சிருட்டித்துவிட்டு, நாமே நமது பாஷையை அமைத்துக்கொள்ள வைத்தார் என்று சொல்வது, மனிதர் சீவித்தற்கமைந்த ஆகாரத்தைப் படையாமல், அவர்களைச் சிருட்டித்து விட்டதுபோலும் ஒரு பெருந்தோஷத்தைக் கடவுள்பாற் சுமத்தி விடும். அன்றியும் பேசுந்திறமையைக் கடவுள் எமக்குத் தந்தார் எனவே, பாஷையும் ஒன்று உளதாதல்வேண்டும் என்பது தானே போந்திடும். பாஷையின்றிப் பேசுந்திறமை பெறப்படாது. சுவாசிக்குந் தன்மையைக் கடவுள் சீவர்களுக்குக் கொடுத்தார் என்றால், அந்தத் தன்மையைக் கொடுக்கும்போது அதனுக்கு வேண்டப்படும் காற்று உண்டென்பது தட்டின்றிப் போந்திடும். காற்றின்றிச் சுவாசிக்குந் தன்மை பெறப்படமாட்டாது. இன்னமும், மனிதற்குரியதொரு விசேட குணம் நினைக்குமாற்றலுடைமை. இது மனிதருக்கே விசேடமாக உள்ளதும். பாஷை ஒன்றின்றி நினைப்பது கூடாது. ஆகவே நினைத்தற்குரிய ஆற்றலைக் கடவுள் எமக்குத்தந்தார் என்றால் அவ்வாற்றலுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பாஷை எம்மைச் சிருட்டிக்குமுன் உளதென்பது வலியுறுத்தப்படும். இதுபற்றியே எமது சமயம் அர்த்தப் பிரபஞ்ச தோற்

டார்க்கு முன் சத்தப்பிரபஞ்சம் உண்டென்று சாதிக்கும். பிராகிருத சிருட்டி ஆரம்பகாலத்திலே, முதற்கட் சிருட்டிக்கப் பட்டார் தேவர்களே யாதலின், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதே தேவபாஷையாகிய சமஸ்கிருதம் எனப்படும். இந்தப் பாஷையிலே அமைந்திருந்த வேதசிவாகமங்களை அவர்களுக்கு உபகரிக்கப்பட்டன.

இவற்றுள் வேதம் பலதிறப்பட்ட பக்குவமுடைய ஆன்மாக்களுக்கும் பொதுமையின்றன் கருதிக் கொடுக்கப்பட்டதாதலின், அது பல பொருள் கொள்ளப்படுதற்குரிய மூலபதங்களாகிய (Primitive Words) இயற்சொற்களால் பெரிதும் யாக்கப்பட்டுளது. இந்த வேதங்களின் உண்மைப்பொருளைப் பக்குவமுடையார்க்குச் சந்தேக விபரீதமின்றிக் காட்டி விளக்குதற்குரிய திரிசொற்களால் (Derivatives) ஆகமங்கள் யாக்கப்பட்டு வேதங்களுக்குப் பாஷியம்போல் அமைந்துள்ளன

இதுபற்றி வேதங்கள் முற்பட்டன என்றும் ஆகமங்கள் பிற்பட்டன என்றும் சொல்வது கூடாது. உயிர் வர்க்கத்து அக்ஷரங்கள் எல்லாம் அங்காப்பு முயற்சியாற் றோன்றும் அகரத்தின் திரிபுகளே யாயினும், பாஷை தோன்றும்பொழுது அகர மாத்திரமே இருந்தது; மற்றை எழுத்துக்கள் எல்லாம் பின்னர்த் தோன்றின என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். எழுத்துக்கள் எல்லாம் அமைந்த பின்னே பாஷை தோன்றுவது கூடும். அங்ஙனமே, இயற்சொல்லும் திரிசொல்லுமாகிய இருவகைச் சொற்களும் அமைந்த பின்னே பாஷை தோன்றுதல் கூடும். அங்ஙனம் தோன்றியபின், திரிசொற்கள் ஆக்கப்படலாம். அதுகொண்டு பாஷாரம்பத்திலே திரிசொற்கள் சிறிதும் இல்லை எனப்படுவது கூடாது.

ஆகமங்களிலே விரிந்து விளக்கப்படும் கொள்கைகள் எல்லாம் வேதங்களிலே அமைந்து கிடக்கும். இதுபற்றியே வேதாகமங்கள் இரண்டையும் பலமுறை ஆராய்ந்து அவற்றின் உண்மைப்பொருளைக்கண்ட ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் வேதத்துக்கும் ஆகமத்துக்கும் பேதம் காண்கிலம் "வேதமே சிவாகமம்" என்று வலியுறுத்திச் சாதித்தார். சொற்கள்போலவே கருத்துக்களும் காலக்கிரமத்திலே முன்னமே வேறுபட்டு புதிதாகத் தோன்றும் என்பது இக்காலத்துள்ள லௌகிக அறிவல்லாத துணிபாதலால், ஆகமங்கள் பிற்காலத்தனவாயின், அவற்றி

லே எடுத்து விளக்கப்படும் சூக்கும ஞானத்துறைகள் வேதங்களிலே அமைந்து விளங்குதல் கூடாது. அவைகள் வேதங்களிலும் ஆகமங்களிலும் ஒருவாறுக காணப்படுதலால் அவ்விரண்டும் ஒரு காலத்தன என்பதும் ஒன்று பொதுவாகவும் மற்றையது சிறப்பாகவும் அமைந்தன என்பதும் தெள்ளிதிற் றுணியப்படும்.

நூலாசிரியர் ஒருவர் தாமே, பாலர்க்கு வேண்டப்படும் பாலபோதங்களை, இயற்சொற்களாலும், குமாரர்க்கு வேண்டப்படும் வசனக்கிரந்தங்களைத் திரிசொற்களாலும் இயற்றுவது பற்றி பாலபோதங்கள் முற்றொரு காலத்திருந்த முதியோர் ஒருவராலும் வசனக்கிரந்தங்கள் பிற்காலத்திருந்த பிறர் ஒருவராலும் செய்யப்பட்டனெனத் துணிவது முறையாகாது. பாஷை நடைகள் காலந்தோறும் பேதப்படுவது உண்மையாயினும், இந்தப்பேதம் எப்போதும் காலவேறுபாட்டானே அமைவது என்பது கூடாது. ஒரே காலத்திலுமே ஒரே பாஷை தானே ஊர்கள்தோறும் பல நடையுற்று வழங்குவதும், ஒரு தேசத்திலும், விளக்கப்புகுந்த விஷயத்துக்குத் தக்கவாறு, பாஷை நடைகள் பலவிகற்ப முறுவதும் அனுபவத்திற் கண்ட உண்மைகளாம். இயற்றமிழ் நடை இசைத்தமிழ் நடையினும், இசைத்தமிழ் நடை நாடகத்தமிழ் நடையினும் பேதப்படுதல் நாம் எல்லாம் நன்கறிந்ததொன்று. இதுபற்றி இம்முத்திறநடைகளுக்கும் காலமுற்பிற்பாடு கற்பிப்பது கூடாது. பாஷை நடையிற் காணப்படும் வேறுபாடு ஒன்று பற்றி காலமுற்பிற்பாடு கற்பிப்பது, பறத்தற்கெழுந்தலாகிய ஒன்றுபற்றிப் பறப்பன எல்லாம் பருந்தென்று முடிப்பது போலும் ஓர் ஆபாசமாம். யாதொரு பாஷை நடையின் விகற்பத்துக்கு பிறகாரணம் காட்டப்படுவது கூடாதாயின், அவ்விகற்பம் காலவேறுபாடு பற்றி அமைந்ததென்று கொள்வதுண்டாகில், அஃதொருவாறு ஒக்கும். வேதசிவாகமங்களிற் காணப்படும் பாஷை விகற்பத்துக்குக்காரணம் பண்டுதொட்டுப் பண்டிதர் பலராலும் எடுத்துக் காட்டப்பட்டு வருவதாகவும், அந்தக் காரணத்தை அற்பமேனும் பொருட்படுத்தாமல், மேலைத்தேசத்திற் றோன்றியோர் நவீன ஆராய்ச்சி முறையிற் பெருமோகங்கொண்டு, அந்த முறையைக் கடவுளால் அருளப்பட்ட வேதசிவாகமங்கள் அளவினும் எடுத்தாளுவது யுக்தமாகாது.

பாஷைகள் காலத்தோடு திரிபுறுதலாகிய இயற்கை நியதியை யாம் ஒரு சிறிதும் மறுப்பதில்லை. அந்த நியதி எங்கள் வேதசிவாகமங்களுக்கு ஏற்புடைத்தாகாதென்பதே யாம் சாதிப்பது. வேத சிவாகமங்களிற் காணப்படும் பாஷை விகற்பத்துக்குப் பிரமாணங்கள் உளவாதல் மாத்திரமன்றி, அந்தப் பதி வாக்குகளை, மானுட வாக்கை அளக்குங்கருவி கொண்டு அளக்கத் துணிதல் சிறிதும் அமைவுடைத்தாகாதென்பது எமது சமயத்தை ஆராய்வார்க்கெல்லாம் இனிது புலப்படும். எங்கள் சுருதி சரித்திர வரையறைக்கமைந்த தொன்றல்ல. என்னை? அது மானுடவாக்கன்மையின். எமது சமயத்தின் வழி நாம் சிருட்டிக்கிரமத்தை ஆராயவதுண்டெனின், அது ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம் என முத்திறப்படும் என்பது நன்கு புலப்படும். கடவுளுடைய திருவருள் காரணமாக வெளிவந்தது ஆத்தியான்மிகம் எனப்படும். அந்தத் திருவருள் சுத்த மாயையை அதிட்டித்து, அதன்கண்ணின்றும் மந்திரங்கள் மந்திரேசர் வாயிலாக வெளிவந்தது ஆதிதைவிகம் எனப்படும். அந்த ஆதிதைவிக முறையால் கலக்குண்ட அசுத்தமாயையின்கண் நிகழும் பௌதிக நிகழ்ச்சிகளே ஆதிபௌதிகம் எனப்படும். மேலைத்தேசங்களிலே பெரிது சன்மானிக்கப்படும் பௌதிக சாத்திரங்கள் எல்லாம், இந்த ஆதிபௌதிக சிருட்டி ஒன்றனுக்கே உரியனவாம். அதனுக்கு மேலேயுள்ள ஆதிதைவிக முறைக்காவது ஆத்தியான்மிக முறைக்காவது அந்தச் சாத்திரங்கள் சிறிதேனும் ஏற்புடையனவாகா. வேத சிவாகமங்கள் மகா சிருட்டி யாரம்பத்திலே, சிவபெருமானுடைய அருட்சத்தி சுத்தமாயையைக் கலக்க, நாதவடிவாயும், விந்துவடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் பின்னர்ச் சொல்வடிவாயும் அமைந்தன என்று எங்கள் சுருதியே எடுத்துச் சொல்லுமாற்றும், நாம் அதற்குறக் கீழ்நிலைக்கண்ணதாகிய பௌதிக முறைகொண்டு அளக்கத் துணிவது “ விரலைக்கொண்டு கடலை அறுக்கண்ட” படியன்றி மற்றன்றாம்.

இந்தக் காலத்தில் பௌதிக முறை மாத்திரமே யன்றிப் பிறிதொரு சிருட்டிக்கிரமமுண்டென்றில்லை எனது மறுப்புறக் கச்சிப்பாரும்

பலருண்டு. இவர்களுக்குப் பௌதிகமுறையாகிய இயற்கை நியதியே (Law of Nature) தெய்வம். இவர்கள் கடவுள் ஒருவர் உண்டென்று சொல்லிக்கொள்வதெல்லாம் உபசார மாத்திரையே யன்றி உண்மையாகாது. பௌதிக முறையாகிய இயற்கை நியதிக்கு மேலாகப் பிறிது நியதி உண்டென்று கொள்ளநேரிட்டால், அங்ஙனமொன்றுண்டென்று கொள்வதிலும், கடவுள்ஒருவர் இல்லையென்று மறுத்துவிடுவதே யுக்தமென்பது இவர்கள் கருத்து. கடவுள் ஒருவர் இருந்தால் அவருடைய திருவருள் விலாசம் இந்தத்தூல பௌதிக இயற்கை மாத்திரையிலே கட்டுண்டமைந்து கிடக்குமென்பது. அவருடைய அருளை வரையின்பாற்படுத்தி அதன்பாற் சூக்கும வஞ்சகம் இல்லை என்று மறுத்தவாறும் என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை. தூலபௌதிகங்கள் மாத்திரமே எமது சிற்றறிவுக்கு விடயமாகுமேனும், இந்தத் தூல உலகிற்றானும் எமது சிற்றறிவு பரிகித்தல் கூடாத பல சூக்கும இரகசியங்கள் அமைந்து கிடத்தலை நாம் அநேகமாகக் காணலாம். தூலபௌதிக முறை ஒன்றே அன்றிப் பிறிது யாதொருமுறை இல்லையென்று கொண்டால், பிரபஞ்சத்தில் காணப்படும் பல அத்தாக்கத் துறைகளை நாம் கடைபோக முடித்துக்கொள்வது கூடாததாகும். கடவுள் இந்தப் பௌதிக முறைக்கடங்காது அப்பாற்பட்டவராயிருக்கும்போது, அவருடைய திருவருட்சேட்டையும், இந்தப் பௌதிகமுறைக்கடங்காது அப்பாற்பட்டதும் உண்டென்று நாம் கொள்ளாதொழிவது கூடாது. பௌதிகமுறைக்கு அப்பாற்பட்ட அருட்சேட்டையாற்றானே கடவுளை நாம் அனுமித்தறக்காண்டல் கூடுமாதலால், அந்தக் காட்சியைக் கடவுள் எமக்குப் பிரசாதித்திலர் என்று சொல்வது அவர்பால் தோஷங்கற்பித்தலாகும். பௌதிக முறைக்கு அப்பால் நிகழும் அருட்சேட்டையினையே எமது சமயம் ஆதிதைவிகம் அத்தியான்மிகம் என்று எடுத்து விளக்குவது. சிருட்டியாரம்பத்திலே திருவருள் முன்னர் அத்தியான்மிக முறையாகவும் அதன் பின் ஆதிதைவிக முறையாகவும் சேட்டித்து அதன் பின்னே ஆதிபௌதிக முறையாகச் சேட்டிப்பது, அத்தியான்மிக முறையால் அமைந்த வேதசிவாகமங்களை நாம் ஆதிபௌதிக முறைகொண்டு அளப்பது ஒரு சிறிதும் பொருந்தாது.

சிருட்டியாரம்பத்திலே அத்தியான்மிக சிருட்டிக்குரிய விசேட புருடர் தோன்றி, அதன்பின் ஆதிதைவிக முறைக்குரியோரும், ஆதிபௌதிக முறைக்குரியோரும் படிமுறையே தோன்றினர் என்பது எமது சமயக்கொள்கை. இதுபற்றியே ஆதிபௌதிக சிருட்டிக்குரிய காலக்கிரமம் கிரேதம், திரேதம், துவாபரம், கலி என ஒன்றின்ஒன்றுபடி முறையே குறைவுற்ற சதுர்யுகங்களாக ஒன்றன்பின் ஒன்றாய் நடந்து வரும் என்று எமது சமயம் எடுத்து விளக்கும். சென்று தேய்ந்திறுதலாகிய இந்த நியமத்தானே நாம் எல்லாம் அநுபவத்தில் நன்கறியக்கிடப்பதுமாம். எந்தக்காலத்துள்ள எந்தச்சரிதையை நோக்கினும், அவையெல்லாம் மேல் நின்று கீழே இறங்குதலாகிய அவரோகண முறையை அநுசரித்தே செல்வதை நாம் பூரணமாகக் காணலாம். கடவுளுடைய பஞ்சகிருத்திய நோக்கமெல்லாம் ஆன்மாக்களையும் ஆரோகண முறையாக உயர்த்தி இறுதியிலே முத்திப்பெரும்பயனை அளிப்பதேயாயினும், அந்த ஆன்மாக்கள் இறங்கி, இறங்கி அநுபவிக்கும் அநுபவங் காரணமாகவே, இறுதியில் இறங்குதலில்லாத ஏற்றத்தை அடையும். ஆன்மாக்கள் எல்லாம் பாசபந்தம் உடையவராதலானும், பாசத்தின்குணம் தன்னாற் பந்திக்கப்பட்டாரை இறக்குதலே யாதலானும், பாச சம்பந்தம் ஆன்மாக்களிடத்தில் இருக்கும் வரையும், அவைகள் இறங்கி இறங்கியே ஏற்றம் அடைதல் வேண்டும். இறங்குதற்குக் காரணம் பாசமும் ஏறுதற்குக் காரணந் திருவருளுமாம். ஏறுதற்குக் காரணமாகிய திருவருள் ஆன்மாவை விட்டு நீங்காது எப்போதும் அதனோடு உடனிலையாய் நிற்குமாதலால், ஆன்மா இறுதியிலே ஏற்றமுறும் என்பதே தேற்றம்.

சிருட்டியாரம்பத்திலே கடவுளுடைய திருவருள் விலாசம் அதிகமாகப் பொலிந்திருக்குமாதலால் அந்தக் காலத்திலே உண்மை அறிவாற் சிறந்த உயர்ந்த புருடரே சிருட்டிக்கப்படுவர் என்பது அவர் பொருட்டாகக் கடவுளால் அநுசரிக்கப்படும் அருள்முறையின் அத்தியான்மிகமாம் என்பது, அதன் பின்னர்த்தோன்றுவார் எல்லாம் அறிவிற் படிமுறையே குறைந்தோராதலால், அவர்பொருட்டாக அநுசரிக்கப்படும் முறை ஆதிதைவிகம்

ஆதிபௌதிகமாம் என்பதும், ஆத்தியான்மிகமுறையால் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்களை ஆதிபௌதிகமுறைகொண்டு அளப்பது சிறிதும் பொருந்தாதென்பதும் உண்மையறிவுடையாருக்கு உள்ளங்கைநெல்லிக்கனிபோல் இனிது புலப்படும்

இங்ஙனமாகவும், இந்த காலத்துள்ள லௌகிக ஞானிகள், ஆதியின் மனிதர் எல்லாம் அறிவு சிறிதும் இல்லாத விலங்கினங்களை ஒப்பவே சிருஷ்டிக்கப்பட்டோர் என்றும், ஆதி மனிதர்களினும் இப்போதுள்ளோர் அறிவிற் பெரிது சிறந்தோர் என்றும், தற்காலத்தை முற்காலத்தினும் பெரிதுயர்த்திப் புகழ்வர். இவர்கள் தமது புல்லறிவுகொண்டு சரித்திரவரையறைக்கடங்காது அதீதமாயுள்ள ஆதிகாலத்தை அளக்கத் துணிவதும் பிறிதோர் ஆபாசமாம். ஆதிகாலத்தைக்குறித்து நாம் யாதாயினும் அறியவிரும்பினால், சமயத்தின் உதவிகொண்டன்றிப் பிறவாற்றானறிதல் சிறிதும் கூடாது. சமயத்தின் உதவிகொண்டு இந்த விஷயத்தை ஆராயுமிடத்து, ஆதிமனிதர் எம்மினும் அனந்தமடங்கு சிறந்தோர் என்பது எமது சமயத்தால் மாத்திரமன்றிப் பிற சமயங்களாலும் நன்கு போந்திடும், சமயக் கொள்கையை ஒழித்துவிட்டு எமது புத்திகொண்டு தான் இவ்விஷயத்தை ஆராயுமிடத்தும், கடவுள் ஆதியிலே அறிவிற் சிறந்தாரைச் சிருட்டித்திலர் என்றால், அது அவருடைய அருண்முறைக்கும், பூரணஞானத்துக்கும் பேராற்றலுக்கும் மாறுகொண்டு முரண்படும். கடவுளுடைய விசேட திருவருட்பிரகாசத்துக்குரிய சிருட்டியாரம்பகாலம், அறிவொளி வீசப்பெறாத மவுட்டிக மென்றால், கடவுளுடைய திருவருளும் மவுட்டிக சம்பந்தமுடையதாக மதிக்கப்பட்டுக் கடவுளுண்மையை நிஷேதித்துவிடும். ஆகவே கடவுள் ஒருவர் உண்டென்று நாம் விசுவசிப்பதுண்டெனில், அவருடைய விசேட அருட்பிரகாசங் காரணமாக உலகந்தோன்றுமிடத்து அந்தப் பிரகாசத்துக்குரியராகிய விசேட அறிவுடையோரே ஆதியிற் தோன்றுவர் என்பதும், அந்தப் பிரகாசம் ஆன்மாக்களுடைய கன்மக் காரணமாகப் படிமுறையாகக் குறையுமிடத்து ஆன்மாக்களுடைய அறிவும் படிமுறையாகக் குறைந்திடும் என்பதும், சமய ஆராய்ச்சி செய்

வோர்க்கு இனிது புலப்படும். உலகம் தோன்றிய பின்னர் ஓர் ஒருதேசம் ஓர் ஒரு காலத்திலே அறிவிற் சிறந்தும் பின்னர்க் குறைந்தும் பின்னர் முன்போற் சிறந்தும் இங்ஙனமே அவ்வத்தேசத்துக்குரிய சாலபேதத் தால் தாக்குற்றிலகுண்டு. ஈதெல்லாம் அவாந்தர நிகழ்ச்சி. எனப் படும் உபகால தருமமேயன்றி மகா காலதருமமாகாது. இந்த அவாந்தர நிகழ்ச்சிகளுள் ஒன்றிரண்டினையே இக்காலத்தார் சரித்திர ஆராய்ச்சி கொண்டு நிச்சயிப்பது. இது கொண்டு மகாகால தருமத்தை அளக்கத் துணிவது பெருமடமையென்க.

மனிதர் எல்லாம் ஆதியிலே அறிவில்லாத மாமூடராயிருந்து காலங் கழியக் கழிய அறிவில் விருத்தியுற்றுச் சிறத்தலே உலகத்தின் நியததரும மாயின், முற்காலத்திருந்த பாபிலோனியர், கிரேக்கர், ரோமர் முதலிய அறிவிற்சிறந்த சாதியார் எல்லாம் பின்னர்த் தமது அறிவையும் பெருமை யையும் இழந்து அழிந்தொழிந்து விடுதற்கும் ஆளாகமாட்டார்.

இந்தக் காலத்திலே லௌகிகக்கல்வி மாத்திரையானே ஆன்மிகத்துக் குரிய உண்மைகளையும் நிச்சயித்துக்கொள்ள முயல்வார் பலர். இவர்கள் முயற்சி ஒருபோதும் பயன்படமாட்டாது. லௌகிகக் கல்வி தத்துவ சாத்திர ஆராய்ச்சியோடு உடன்கலந்து நடந்தாலன்றி உண்மை ஒரு போதும் புலப்படமாட்டாது. லௌகிகக்கல்வி மனிதனுடைய சிற்றறிவு எட்டுதற்குரிய அவ்வளவுக்குச்செல்லுமேயன்றி அப்பாற் சென்றிடமாட் டாது. அப்பாற் செல்லுவது தத்துவ ஞானக்காட்சியேயாம். "Science ends where Philosophy begins" என்றார் ஓர் பண்டிதோத்தமர். தத்துவஞானத்தைத் துணைக்கொண்டு நாம் வேதாகமங்களின் உற்பத்தி யை விசாரிப்பதுண்டானால், அவை இரண்டும் ஆதியிலே ஒருங்கே அமைந்தன என்பதும் செவ்விதிற்போந்திடும். அவை வேறுவேறுகாலத்தன வாயின் வேற்றுப்பொருளை விளக்கி முரண்படுமன்றி ஒன்றுக்கொன்று சார்புற்று ஒருபோதும் நடந்திடமாட்டா. இந்த இருதிறச் சுருதிகளை யும் நுணுகி ஆராய்ந்த ஐரோப்பிய பண்டிதர் (M. Barth) ஒரு வர் "வேதங்களும் ஆகமங்களும் அவற்றின் உற்பத்தி காலந்தொட்டு

ஒன்றை ஒன்று தழுவிநிற்கும் என்கிறார் (The Vedic writings chance upon them (Agamas) and, as it were, go alongside of them during the very period of their formation) வேதசிவாகமங்களைக் கசடறக் கற்றுணர்ந்த ஞானானுபவராகிய திருமூல நாயனார்

"வேதமோ டாகமம் மெய்யாமிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக" என்பர்.

உண்மை அறிவுடையார் கொள்கை இங்ஙனமாக, 'வேதங்களை ஒருமுறையேனும் கிரமமுறைப் பாடங்கேளாமல், அவற்றைத் தமது மனம்போனவாறு மொழிபெயர்த்த ஐரோப்பியரது மொழிபெயர்ப்பு நூல்களை ஒருமுறை இருமுறை வாசித்துவிட்டு, அவற்றின் சொன்னடை பொருணடைகளிலிருந்து, வேதசிவாகமங்களின் காலத்தை நிச்சயிக்கத் துணிவது 'நக்குகிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன' என்னும்முதுமொழிக்கே இலக்காகும்.

வேதங்களை மொழிபெயர்த்த ஐரோப்பியருக்கு அவற்றின் உச்சாரண முறையே சிறிதும் விளங்காது. வேதங்கள் உதாத்த அனுதாத்தம் முதலிய பல சுரவேறுபாடுடையன. இந்த வேறுபாட்டை இனிதுணர்ந்தே அவற்றின் பொருள்களை நிச்சயிக்கப்படுதற்குரியன. இந்தச் சுரவேறுபாட்டை விளக்கவே பிரத்தியேகமானதோர் பெருஞ்சாத்திரமுண்டு. இந்தச் சாத்திரம் ஒன்றுளதாயினும், இதனை ஆதாரமாகக்கொண்டு வேதங்களைத் தக்க ஆசிரியர் முன்னிலையில் பலகாற் பயின்று கற்றாலன்றி, அவற்றின் உண்மையான உச்சாரணமும், அவ்வுச்சாரணம்பற்றிப் பெறப்படும் பொருளும் புலப்படுவது ஒருக்கே கூடாது. இதுபற்றியே வேதங்கள் பல நெடுங்காலமாக எழுதாமறையாய் மன்னுமுறையாகப் பரம்பரைக்கிரமத்தில் படிக்கப்பட்டு வந்தன. இவற்றின் பொருளை ஆசிரியர் ஒருவரும் எவருக்காவது பக்குவமறிந்தன்றிச் சொல்லிக்கொடுக்க மாட்டார். இவற்றின் உண்மையான உச்சாரணபேதத்தையும் இவற்றின் இரகசியார்த்தத்தையும், இவற்றுக்குரியராகிய பிராமணர் தமது நெஞ்சப்பேடகத்துள் பூட்டிவைத்திருந்தார் என்றால், இவற்றை அந்நியதேசத்தவ

ரும் அந்நிய மதத்தவருமாகிய ஐரோப்பியர் அறிவது ஒருவாற்றானும் கூடாது. அந்த ஐரோப்பியருடைய மொழிபெயர்ப்புகளை நம்பி நாம் வேதங்களின் சொன்னடை பொருள் நடைகளை நிச்சயித்து ஆகமங்களோடு ஒப்பு நோக்கிக் காலநிச்சயம் பண்ணத் துணிதல் எங்ஙனம் என்பதை நம்மவர் சிந்திப்பதில்லை.

வேதங்களிலே வேதநாயகராகிய சிவபெருமானுடைய திருநாமம் சொல்லப்படவில்லையென்றும், ஆலயவழிபாடு அங்கே விதிக்கப்படவில்லையென்றும், மறுபிறப்புண்மை தானும் வேதங்களாற் பிரதிபாதிக்கப்படவில்லையென்றும் இவைகள் எல்லாம் பிற்காலத்தனவாகிய ஆகமங்களில் மாத்திரமே சொல்லப்பட்டுள என்றும் ஆங்கிலபாஷை கற்ற நம்மவர், ஐரோப்பையருடைய மந்திரத்தை நம்பி நவீனப்பிரசங்கங்கள் செய்யத் தொடங்கிக் கொண்டார்கள். நாங்கள் எங்கள் சமயத்துக்குரியனவாகிய வேதசிவாகமங்களைப் பற்றி அந்நிய மதத்தினராகிய ஐரோப்பியரிடத்திற் கற்றுக்கொள்ளத் துணியுங்காலம் வந்துவிட்டதே என்பதை நினைக்குந்தோறும் எமது நெஞ்சம் பெரிது வருந்துகின்றது. எமது சமயத்தை ஐரோப்பிய நாகரீகத்துக்காக விற்றுவிடத் துணிந்துநிற்பவராகிய நாமா "பாரத மாதா"வுக்காகப் பாடுபடுபவர்? வேதங்களிலே சிவநாமம், சிவலிங்கோபாசனை, ஆலயவழிபாடு, மறுபிறப்புண்மை முதலாயினவெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதற்கு, வைதிகப் பிரவர்த்தகர்களாகிய முனிபுங்கவர்களும் வேதசிவாகம வியுற்பத்தியிற்சிறந்த பரமாசாரியர்களும் பண்டிதோத்தமர்களும் சொன்ன சாட்சியங்களை எல்லாம் நாம் நம்பாது ஒதுக்கிவிட்டு, இப்போது யானைகண்ட குருடர்போல் ஐரோப்பியர் சொல்லும் சாட்சியத்தை நாம் நம்பத் துணிந்துகொண்டால் எங்கள் சமயாபிமானமும் தேசாபிமானமும் வேடமாத்திரமன்றி மெய்யென்று சொல்வது ஒருபோதும் கூடாது.

வேதங்கள் யாகாதிகளுக்காகவே பெரிதும் உபயோகிக்கப்படுவன. சிவபெருமான் யாகங்களுக்கு அதிபதியாகும்பொழுது உருத்திரநாமத்தாலேயே அழைக்கப்படுகின்றார். அந்தப் பெருமானுக்குரிய விசேடணங்

ன் எல்லாம் வேதங்களிலே உருத்திரமூர்த்திக் குரியனவாக எடுத்துச் சொல்லப்படுதலால், வேதங்களில் யாகாதிபதியாக அறியப்படும் உருத்திரமூர்த்தியும் சிவபெருமானும் ஒருவரே என்பது தானே போந்திடும். எம்மை அரசபுரியும் வேந்தர், இந்திய பரிபாலனத்தை நோக்க சக்கிரவர்த்தி என்றும், ஆங்கில பரிபாலனத்தை நோக்க அரசர் என்றும் எடுத்துப் பேசப்படுவர். இதுகொண்டு இந்திய சக்கிரவர்த்தியொருவர், ஆங்கில அரசர் மற்றொருவர் என்று ஒருவரும் சொல்லத்துணியார். வேத மந்திரங்கொண்டு சிவபரத்துவம் சாதிக்கப்பட்டு எத்தனையோ சாத்திரங்கள் அமைந்துள்ளனவாகவும் அங்ஙனம் சாதித்தவழி எதிர்க்கட்சியார் தாமும் சிவநாமம் வேதத்திலே இல்லை என்று வாதிக்க முற்பட்டிலராகவும், இந்தக் காலத்திலே வேத ஆராய்ச்சி சிறிதும் இல்லாத நம்மவர் சிலர் இந்த நவீன வாதத்தை எடுத்தாளுவது அறிவுடையார்க்கு நகை விளைக்குமேயன்றி மற்றொரு பயனைத் தந்திடமாட்டாது. வேதசாரத்தை வடித்தெடுத்து விளக்கப்புகுந்த உபநிடதங்களும் வேதப் பொருளைச் சரித்திர முகத்தில் விளக்கப்புகுந்த புராணங்களும் சிவபெருமானை வேதக்கடவுள் என்றே வற்புறுத்திக் காட்டும்போது நாம் அந்த உபநிடதங்கள் புராணங்களின் சாட்சியத்தைப் புறம்பே ஒதுக்கிவிட்டு, எமது பௌதிக சாத்திர பாண்டித்தியங்கொண்டு பிறிதொரு கொள்கையை நாட்டத் துணிவது, எமது அறியாமையின் துடிப்புக்கே தக்க சான்றாகும். வேத விஷயத்திலே எமது துணிபா, உபநிடத புராணங்களின் துணிபா கொள்ளத்தக்கது என்பதை நம்மவர் சற்றே ஊன்றிச் சிந்தித்தல்வேண்டும்.

இனி வேதங்களை ஒருமுறை இருமுறையின் அமையாது பலமுறைகளில் தக்க ஆசிரியர் முன்னிலையிலே உண்மைப்பொருள் கண்டு கற்றுணர்ந்த மகான்களாகிய நீலகண்டர் அரதத்தர் அப்பய தீக்ஷிதர் சங்கராசாரியர் முதலாயினோர் எல்லாம் வேதங்களிலே சிவநாமம் உண்டென்பதற்குப் பிரபல சாக்ஷியம் பகரும்போது, இவருடைய சாட்சியங்களினும் வேதத்தைத் திரிபுற விளங்கிய கிறிப்பித் முதலியோருடைய சாட்சியத்தையா நாம் கைக்கொள்வது! வேதத்தின் இருதய ஸ்தானமாகிய உபநிடத்தே

சிவநாமம் நாயகமணியாக ஜொலிக்கின்றதென்றும் வேத சாகைகளிலே பல்லாயிர மிடங்களிலே சிவநாமம் முழங்குகிறதென்றும், சிவலிங்கோபாசனை இருக்கு வேதத்திற்றானும் எடுத்துப் பேசப்பட்டுளதென்றும், காசி சிதம்பரம் முதலிய ஆலயங்கள் வேதங்களிலே எடுத்துப்போற்றப்படுகின்றனவெனவும் மறுபிறப்புண்மையை ஆதாரமாகக் கொண்ட வசனங்கள் அநேகங்களாக வேதங்களிலே மலிந்து பொலிந்தனவென்றும், வேதங்களை வரன்முறை தவறாதுகற்ற மகான்கள் சொல்லும்போது, நாம அவர்களுடைய வாக்குகள் அனைத்தையும் பொய்யென்று ஒதுக்கிவிட்டு, மேல்நாட்டுத்தேசத்து மிலேச்ச சமயிகள் சொல்லியா மெய்யென்று கொள்வது? வேதப்பொருள்களை உள்ளபடி உணராத எமது அறியாமை, இவையெல்லாம் நாம் அங்கீகரித்தற்கு எமக்குப்போதிய ஆதாரமாகுமா? ஆகாது! ஆகாது!!

சிவபெருமான் திராவிடராகிய எங்கள் கடவுள் என்றும் ஆரியர் எம்மோடு வந்து கலப்புற்ற பின்னே அவர்களும் அந்தப் பெருமானை வணங்குவாராயினர் என்றும், அதுபற்றி அவருடைய திருநாமம் வேதங்களிற் கேட்கப்படுவதில்லை என்றும், எம்மூரிலுள்ள ஒரு கத்தோலிக்க "சுவாமி" யாரும் "சாத்திரம்" சொல்லுகிறார். சிவபிரான் ஆரியருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட கடவுளாயின் அவருக்குரிய சதாசிவன், மகேசன், உருத்திரன், பசுபதி, நீலகண்டன், உமாபதி முதலிய பல நாமங்கள் முற்காலத்தனவாகிய வேதங்களிற்கிடந்து முழங்குவதெப்படியோ? சிவபெருமான் வேதக்கடவுளல்லராயிருந்தால், ஆரியர் தமது வேதக்கடவுளுக்குரிய பெயரை திராவிடருடைய கடவுளாகிய சிவபிரானுக்கு ஒருபோதும் கொடுத்திடமாட்டார். அவர்களுடைய வேதபத்தியின் உறுதி நாம் இன்றைக்கும் கண்கூடாகக்கிடக்கின்றது. அல்லாமலும் திராவிடர் தாமும் தம்முடைய கடவுளைப் பிறசாதியாருடைய தெய்வத்தின் பெயர்கொண்டு அழைத்தற்கு ஒரு சிறிதும் உடன்பட்டிருக்க மாட்டார்.

ஆரிய திராவிடக் கலப்பால் திராவிடருடைய தெய்வமாகிய சிவனை ஆரியரும் காலாந்தரத்தில் கைக்கொண்டனர் என்பது இக்காலத்துள்ள

சாத்திர ஆராய்ச்சியுடையாருடைய அனுமானம். ஆரியர் திராவிடரை அடிப்
படுத்து அவர்களுடைய நாடுகளைக் கைக்கொண்டு அவர்களைத் தமது ஆக்
ஞைவழி நிறுத்தி அரசுபுரிந்தாராயின், தமது கொள்கையைத் தாம் கைக்
கொள்ளமாட்டார். அதிலும் அவர்களுக்கு அவர்கள் உயிரினும் சிறந்த
சமய விஷயத்தில் ஒரு சிறிதும் கைக்கொள்ளார். பிறசாதியார் அங்ங
னம் கொண்டாலும், சமயத்திலே அத்தியந்த பக்தியுடைய ஆரியர் அங்ங
னம் கொள்ளார். இனி அங்ஙனம் கொண்டார் என்று ஒரோவழித் துணி
ந்தாலும், திராவிடருடைய தெய்வத்துக்குத் தமது கடவுளரினும் முதன்
மை கொடுத்திடமாட்டார். வேதங்களிலே சிவனுக்கே மற்றெல்லாக்
கடவுளரினும் முதன்மை கொடுத்திருத்தலால், அவரை ஆதியிற் திராவிட
தெய்வம் என்பது ஒருவாற்றானும் அமையாது. ஆரியரும் திராவிடரும்
ஆதியிலே ஒரு சாதியாரோ வேற்றுச்சாதியாரோ என்பது பிறிதொரு
விஷயம். அந்த விஷயத்தைக் காலம் வாய்ப்புழி ஆராய்ந்து காட்டுவாம்.
ஆனால் திராவிடருக்குப் பிறிதொரு சமயம் அமைந்திருந்தது என்பதற்குச்
சிறிதாவதோர் ஆதாரமில்லை. எந்தச்சாதியாருக்கும் சமயமே அதி
முக்கியமானதால், அவர்கள் தமது சமயத்தையும் சமய நூலையும் பொன்
போலப் போற்றுவதன்றி ஒருபோதும் அழியவிட்டிருக்கமாட்டார். திரா
விடருக்குள்ளே பிறிதொரு வேற்றுச்சமயமாவது வேற்றுச்சமய நூலா
வது இருந்ததென்று சொல்ல அணுப்பிரமாணமேனும் ஆதாரங்காண
வில்லை. அவர்களுடைய பழைய நூல்களாகிய சங்கநூல்களை ஆராயுமிடத்து
வருணன், இந்திரன், பிரமா, விட்டுணு முதலிய ஆரிய தெய்வங்கள் போற்
றப்படுதலை நாம் பெரிதும் காணலாம். ஆகவே தெய்வ வழிபாட்டளவில்
ஆரியரும் திராவிடரும் ஒரே முறையையே எக்காலத்தும் அனுசரித்து வந்
தார் என்பது நன்று தாபிக்கப்படும்.

இனி ஆகமானுசாரம் திராவிடர்க்கேயுரியது ஆரியர்க்குரியதன்றென்
பதும் ஒருவாற்றானும் அமைவுடைத்தாகாது. இராமர் காலத்திற்றானே
ஆகமங்கள் ஆரியர்களால் அனுட்டிக்கப்பட்டு வந்தமைக்கும் இராமர் சிவ
லிங்கம் தாபித்துப் பூசித்தமைக்கும் அருச்சுனன் சிவபூசாதுரந்தரனும்பிரு

ந்தமைக்கும் வேத இருடிகள் தாமும் சிவார்ச்சனையை மேற்கொண்டொழுகினமைக்கும் ஆரிய கிரந்தங்களிற்றானே அநேகசாட்சியங்கள் உள்ளன. வேதங்களிற்றானே ஆகமங்களும் புராணங்களும் அநுவதிக்கப்பட்டுக்கிடத்தலும், ஆகமங்களில் வேதங்களும் புராணங்களும் அநுவதிக்கப்பட்டுக் கிடத்தலும், புராணங்களிலே வேதங்களும் ஆகமங்களும் அநுவதிக்கப்பட்டுக் கிடத்தலும், இவை ஒன்றனை ஒன்று ஆதிகாலந்தொட்டுத் தழுவி நிற்கும் உண்மையை இனிது வலியுறுத்தும். ஆனால் ஓர் ஒரு காலத்திலே ஓர் ஒரு திசையிலே ஓர் ஒரு கொள்கை மற்றைக் கொள்கைகளிலும் விசேடமாக எடுத்தாளப்படுவதுண்டு இதுகொண்டு மற்றைத் திசைகளிலே அந்தக் கொள்கை அறியப்படாது கிடந்ததென்பது அமையாது. இனி சிவன் என்னும் சொல்லே ஒரு சமஸ்கிருத பதம் அதைத் திராவிட பதம் எனக்கொண்டால் அதனுக்குரிய அநேக அருமருந்தன்ன பொருட்சிறப்பை இழந்துவிடவரும். சிவனென்னும் ஒரு சொல் மாத்திரமல்ல! சிவனுக்குரிய பல்லாயிர நாமங்களில் சில வொழியப் பிறவெல்லாம் சமஸ்கிருத பதங்களேயாம். இங்ஙனமாக, நாம் சிவனைத் திராவிடதெய்வமென்பது சிறிதேனும் அமையாது. சிவமகிமையை எடுத்து விளக்கப்புகுந்த புராணங்களெல்லாம் தேவவிருடிகளது சரித்திரங்களையும் ஆரிய நாட்டுச் சரித்திரங்களையுமே எடுத்துச் சொல்லுமன்றி திராவிட தேசச்சரித்திரம் ஒன்றனையாவது பிரத்தியேகமாக எடுத்து விளக்குவதில்லை. சிவன் திராவிட தெய்வமாயின் புராணங்களிலே திராவிட சரித்திரங்களாற்றானே அவருடைய மகிமை எடுத்து விளக்கப்பட்டிருக்கும். ஆகவே சிவனைத் திராவிட தெய்வதம் என்பாரது கொள்கை ஒருவாற்றானும் நிலைநிற்கவல்லதல்ல என்பது தெற்றெனப்போதரும்.

(இன்னும் வரும்.)

ச. சபாரத்தின முதலியார்,

யாழ்ப்பாணம்.

ஶ்ரீ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூப்பொருள் ஆராய்ச்சி.

தொகுதி-8-பகுதி-9-பக்கம்-200-தொடர்ச்சி.

பரமசிவன் அநாதி கேவலத்திலே கிடக்கிற ஆன்மாவை அருளி சிருட்டி செய்கிற காலத்திலே தாம் தலமாகவும் தீர்த்தமாகவும் மூர்த்தியாகவும் திருமேனிகொண்டு சிவதலத்தில் புழு முதலான சரீரங்கள் சனித்தாலும் வசித்தாலும் மரித்தாலுஞ் சிவபுண்ணியத்தைக் கொடுப்பர். தீர்த்தத்தில் மீன் முதலியவைகள் சனித்தாலும் வசித்தாலும், மரித்தாலும் சிவபுண்ணியங்களுண்டாம். நாற்கால் மிருகங்கள் மனுஷர் முதலானவர்கள் குடித்தாலும் முழுகினாலும் இலைகள் தெறித்தாலும் நெற்பயிர் முதலானவை களந்தத்தீர்த்தம் பாய்ந்து விளைந்த நெல்லைப் பறவை முதலானவைகள் புசித்தாலும் சிவபுண்ணியமுண்டாம். சிவலிங்கத்திலே செய்யும் அர்ச்சனையும் அபிஷேகநைவேத்திய முதலானவைக்குரித்தாயிருக்கிற விருட்சங்களாகவும் நெல்முதலான பயிர்களாகவும் பசு முதலான மிருகங்களாகவும் பணிவிடைக்குரிய சராசரங்களாகவும் சனிப்பித்துச்சிவபுண்ணியங்களைக் கொடுப்பர். (௬௧)

விஞ்ஞானகலருக்கு ஆணவமலமொன்று பந்தம் கருமமாயையு மில்லாதிருந்தால் பந்தம் நீங்காது. ஆகையால் சுத்தகன்மமும் அசுத்தமாயா தனுவுமுண்டு. அப்படியுண்டாயிருக்கையில் இல்லையென்றது அந்த விரண்டினாலும் அவரவர்களுக்கு வக்க பின்மையின். (௬௨)

பிரளயாகலருக்கு ஆணவமலமும் கன்மமலமுமே பந்தம். சரீரமின்றிருந்தால் கன்மம் புசிக்கப்படாதாகையால் அசுத்தமாயா தனுவுண்டு. அப்படியுண்டாயிருக்கையிலு மில்லையென்றது அவர்களுக்கதனாலே மயக்கமின்மையின். (௫௧)

கருமபரிபாகி நடையாவது சரீரப்பற்று விடாமல் வேதாகமங்களை வழுவாதனுட்டித்தல். (௫௨)

மலபரிபாகி நடையாவது சரீரப்பற்றுகளை விட்டு ஞானசாத்திரங்களையோதிக் கேட்டுச்சிந்தித்தல் தெளிதலையடைந்து நிட்டையைப்பொருந்துதல். (௫௩)

ஞானவானுக்குத் தேகம் விடுதலாவது தத்துவசுத்தி படுதல் (௫௪)

ஞானவானுக்கு அந்தியேட்டியாவது சிவஞானத்தினாலே யடைந்த சுத்தாவத்தையையுஞ் சிவஞானத்தையு நீங்கிச் சிவானந்தத்திலே யழுந்தல். (௫௫)

சிவன் சத்தியோடு கூடினால் பிரபஞ்சமுண்டாம். சத்தி சிவத்தோடு கூடினால் பிரபஞ்சம் ஒடுங்கும். ஆன்மா ஆன்மபோதத்துடன் கூடினாற் பிரபஞ்சமுண்டாம். ஆன்மபோதம் ஆன்மாவினிடத்தி லடங்கினால் பிரபஞ்சமொடுங்கும். (௫௬)

ஆன்மாவிற்கு மலப்பிணியினாலே சரீரமுண்டானது. சிவனுக்கு ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்குமாசையினாலே திருமேனியுண்டானது. ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கும்மருந்தாவது அந்த ஆன்மாவினுடைய பிராரத்தந்தானே. ஆன்மா பிராரத்தத்தைச் சிவனுக்குக் கொடுத்தால் தன்னுடைய மலப்பிணி நீங்கும். ஆன்மா பிராரத்தத்தைத் தானே புசித்தால் மலப்பிணி நீங்காது. (௫௭)

ஆணவமலம் தன்னைப்பிடித்தவனை மயக்குமென்றதற்கும் பிடியாதென்றவனை மயக்காதென்பதற்குவமை, ஒரு விடன் பர அரிவையரைக் கண்டவிடத்து அவர்களவனை மயக்குதல்போலும். சந்நியாசிகளை யவர்கள் மயக்காது போலும். (௫௮)

சரீரத்திசிபாவது பாம்பு சட்டை கழற்றினாற்போல தூலதேகத்தை விட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு பூதசரீரத்தையும் பொருந்துதல்.

புண்ணியபாப சேடங்களினாலே பூதபரிணாமசரீரத்தைப்பொருந்துதலுமாம். இடத்திரிபாவது முட்டையிலேயிருந்த புள்ளானது முட்டையை விட்டு நீங்கிக் கொம்பிலேயிருத்தல்போல் ஆன்மா தூலதேகத்தைவிட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு பூதசார சரீரத்தைப்பொருந்தி நரகத்திலே செல்லுதலும் பூதசரீரத்தைப் பொருந்திச் சுவர்க்கத்திலே செல்லுதலும், பூதபரிணாம சரீரத்தைப் பொருந்தி மீளவுந் தரையினிடத்திலே செல்லுதலுமாம். அறிவித்திரிபாவது கனவிலே யறிந்த செய்தியெல்லாம் கனவிலே மறந்தாற்போல ஆன்மா தூலதேகத்திலே யறிந்த செய்தியெல்லாம் தூலதேகத்தைவிட்டு நீங்கிப் பூதசரீரத்தையும் பூதசார சரீரத்தையும் பொருந்தி நரக சுவர்க்கங்களை யடைந்தபோது மறந்தொன்றுந் தெரியாதிருத்தல். (௫௧)

ஆன்மாவுக்கு எல்லைவற்றினு முந்தினது பக்குவம் அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம். அதன்பின் மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு ஆசாரியர் திருமேனி கொண்டெழுந்தருளி வருதல் அவர் திருவுளம் பற்றுகின்ற ஞானசாத்திரமிவை மோட்சமடைதற் கேதுவாகிய முறைமையெனவறிக. (௫௨)

சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், உருபகம், உருபம், சொரூபம், தரிசனம், சத்தி, இலாபம் ஆக ௰௧.

(பாச சுபாவமவாது அறியாமல்)

௧ பாசவியாத்தியாவது: ஆணவம், மாயை, கன்மம், மாமாயை திரோதாயியென்றறிக.

௨ பாசவியார்த்தியாவது: ஆணவமொன்றாயிருக்க சருவாத்மாக்களிடத்தும் வியாத்தியாய் நிற்கை. மாயை யொன்றாயிருக்கத் தனுகரண புவனபோகங்கள் வெகுவிதமாகியும், கன்மமொன்றாயிருக்கச் சஞ்சித புண்ணிய பாவங்களாகியும் பிராரத்த புண்ணிய பாவங்களாகியும், ஆகாமிய புண்ணிய பாவங்களாகியுமிருக்கை. மாமாயையொன்றாயிருக்கச் சுத்தத் தத்துவங்களாகியும், சத்தகோடி மகாமந்திரங்களாகியும், வேதாகம சாத்திர புராணங்களாகியும் நிற்கை. திரோதாயி யொன்றாயிருந்துஞ் சர்வான்மாக்களையு மறைப்பித்து நிற்கை.

௩. பாசகுணமாவது : தான் சேடமாயிருக்கை.

௪. பாச விசேஷமாவது : தான் சேடமாயிருக்கச் செயற்படுதல்.

௫. பாசரூபகமாவது : இத்தன்மை யெல்லாமுடையதொரு பாசமுடையதொரு பாசமுண்டென நிற்றல்.

௬. பாசரூபமாவது : தானெடுத்த தேகவடிவாய் நிற்கை.

௭. பாசரூபமாவது ; ஆன்மாக்களிடத்துச் செம்பிற்காளிதமெனவும் உடலிற்கலந்த விஷமெனவும் தவிராத தெண்டமெனவும் தேருக்குப் பாகனெனவும் இருளுக்கிருளெனவும் மறைப்பித்து மயக்கியும் புசிப்பித்தும் பிரேரிப்பித்தும் விட்டுநீங்காத அந்தகாரமாயும் நிற்றல்.

௮. பாச தரிசனமாவது : ஆன்மாக்களுக்குப் பொய்யை பொய்யென்றறியாமலும் தன்னைத் தனக்குத் தெரியாமலும் அருளைத்தெரியாமலும் சிவனைத்தெரியாமலும், தான் பிரமமென்னும்படியும் இதமகிதங்களைப்புசித்தும், பிரபஞ்சந்தேசன்றுமது நிற்கை.

௯. பாசசத்தியாவது : இந்தப் பாசத்துக்கும் பணியில்லையென்று ஆன்மா விதுவல்லவென்றறிந்தும் விடுதல்.

ஆக விந்தப்பத்து அவசரமும் அருளாய் நின்று அறிக.

மேலான்ம சுபாவமாவது அனவரதமும் தத்துவங்களுடனே கூடுதல் (௧) ஆன்ம வியார்த்தியாவது கூடின தத்துவங்கள் தானாய் அந்தத் தத்துவங்களுள்ளளவும் வியார்த்தமாயிருக்கை. (௨) ஆன்மா வியாபகமாவது தத்துவங்களுள்ளளவும் ஒழியாமல் யானெனதென்கைமேவிடுதல். (௩) ஆன்ம குணமாவது அறியாதிருக்கை. (௪) ஆன்ம விசேடமாவது அறியாமல் ஜடமாயிருக்கச்செய்தே பக்குவம் வந்தவிடத்து அறிவிக்க வறிந்து அறிவாய் விடுகை. (௫) ஆன்மரூபகமாவது வுடம்பொழிய வுயிருமுண்டெனப் பொருந்துதல். (௬) ஆன்மரூபமாவது இச்சாஞானக் கிரியா சொரூபமாய் நிற்கை. இச்சையாவது ஒரு பண்டபதார்த்தத்திற்கு ஆசைப்படுதல். ஞானமாவது ஆசைப்பட்ட பதார்த்தங்களைப் பகுத்தறிதல். கிரியையாவது அறிந்த பதார்த்தங்களை யுபகரிக்கச் செய்யுந் தொழில்.

மும்பொருள் ஆராய்ச்சி முற்றிற்று.

113

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

பதினான்காவது வருட

அறிக்கைப் பத்திரம்

1919.

"சித்தாந்தத்தே சிவன்முத்தி சித்தித்தலாற்
சித்தாந்தத்தே நிற்போர்முத்தி சித்தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொருளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே"

என்று பெருந்தவமிக்க ஞானவள்ளலாகிய திருமூலமாமுனிவர் தாம்பெற்ற இன்பம் வையகமும் பெறவேண்டுமென்னுங் கருணை மேலீட்டினால் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் சித்தாந்த நன்னெறியானது பிறவித்துயரால் அலமந்து அதன்கணின்று விடுதலைப் பெற்று அழிவிலின்பம் பெறக்கருதும் உயிர்கட்கு அங்கை நெல்லி போல் உண்மைப் பரம்பொருட் காட்சியை எளிதிலளிப்பதில் ஒப்புயர்வில்லாதது. அதனியல் புணராத பலர்க்கும் அதன் செம்மையை யுணர்த்துதற்பொருட்டும், அது எவ்வுயிர்க்கும் அதனதன் நிலைக்கேற்ற நெறிகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு அவற்றின் நுண்டொடர்பை நன்குணர்த்தி யொற்றுமை காட்டவல்ல இணையற்ற பெருநெறியென்ற உண்மையை இந்நிலவுலகினர்க்கு இனிது விளக்குதற்பொருட்டும், இத்தமிழகத்தின்கண்ணே அறிஞர் பலர் சைவசித்தாந்த மகாசமாஜமெனப் பெயரிய பெருங்கழகமொன்றை நிலைநிறுவியுள்ளார்கள்,

ஆண்டுநிறை விழா.

இப்பெருங்கழகத்தின் ஆண்டுநிறைவிழா 1906-ம் ஆண்டுமுதல் 1917-ம் ஆண்டுவரை முறையே நெல்லைமாநகர், நாகையம்பதி, திரிசிரபுரம், இராமநாதபுரம், சென்னைபட்டினம், காஞ்சிமூதூர், வேலூர், கூடலூர், தஞ்சைமாநகர், திருமயிலை, பிரம்பூர் செம்பியம் என்னும் பேரூர்களில் அணிபெற நிகழ்வுற்றன. சென்ற ஆண்டு, இச்சபையினர்செய்த பெருந்தவ முருவெடுத்தன்ன இருபொருள் வள்ளற்பெருந்தகையாகிய யாழ்ப்பாணம், வண்ணைநகர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் கருணைகூர்ந்து கழகத்தலைமைபூண்டு முன்னையினும் மிகச் சிறப்பாக திருக்குடந்தையின்கண் பேரவையை நடாத்துவித்தனர். அதன் பின்னும் இச்சபையாகிய ஞானப்பெருமண்டபத்தைத் தாங்கி நனிபெறத் திகழச்செய்யும் ஓர் வைரத்தூணாக உதவிபுரிந்து நிலவும் அன்னாரது ஊக்கமுமுயற்சியும் காரணமாகவே இவ்வாட்டைப் பெருங்கூட்டமும், சமாஜத்தின் பிறநன்முயற்சிகள் யாவும் தட்டின்றித் தழைத்தோங்கற்பாலன. அப்பெருவள்ளலார் நீடூழிவாழ்ந்து மாசற்ற தமது உள்ளமாகிய திருவம்பலம்போல் இம்மாண்கழகத்தையும் மன்னுவிக்குமாறு சிவபரம்பொருளது திருவருளைப் பன்முறையும் சிந்திக்க வேண்டுகின்றனம்.

அங்கத்தவர்.

நிகழ்கழகத்தே இப்பெருங்கழக அவையிகளின் தொகை-457.

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அவையிகளின்தொகை குறைந்தமை விசனிக்கற்பாலது. சைவாபிமானிகள் கவனிப்பார்களாக.

செய்தி நிலையம்.

இப்பெருங்கழகச் செய்திநிலையம் சென்னை, திருமயிலை, இராஜவிலாசத்திலுள்ள பொழிலகத்தேயாம். இந்நிலையத்திற்கு நிலையச் சார்பாய் இருக்கை நிலங்கள் அமைத்துதவும் வள்ளல் கி-இராஜ-இராமமணியாரவர்களின் சைவாபிமானம் வியக்கற்பாலது.

சித்தாந்தம்.

இப்பெருங்கழகத்தினின்று திங்கட்கொருமுறை தோன்றித் திகழும் ஞானத் திருவிளக்கானது 'சித்தாந்தம்' என்பதாகும். கழிந்த நான்காண்டுகளாக கடிதனிலே மிருதிப்பட்டும் திங்கள்தோறும் தன்னொளி குறைவின்றித் திகழாநின்றது.

காரியக்கூட்டம்.

இக்கூட்டம் அங்கத்தினர் சமாஜநிலையத்தே இவ்வாண்டில் எண் முறை கூடிப் பெருங்கழகச்சார்பாய செய்கைகளைக்குறித்து தம்முட் கலந்து உரையாடி செய்யக்கூடிய யாவும் செய்துள்ளார்கள்.

பத்திராதிபர்.

மேற்கூறிய சித்தாந்தமென்னும் சிவஞானச்சுடர் கொளுத்தும் பத்திராதிபர் திருவாளர் கி. குப்புச்சாமி முதலியாரவர்கட்கு இக்கழகத்தார் என்றும் நன்றிபகருதற்குரியர்.

கணிதபரிசோதகர்.

திங்கள்தோறும் கழகக்கணக்குகளைப் பரிசோதித்து வெளியிட உதவிய திருவாளர் M. மாசிலாமணி முதலியாரவர்கட்கும் ஆண்டின் இறுதியில் கணிதபரிசோதனை செய்துதவிய திருவாளர் வக்கீல் A. C. சண்முக நயினார் பிள்ளையவர்கட்கும் காரியக்கூட்டத்தினர் நன்றி பாராட்டுகின்றனர்.

கிளைக்கழகங்கள்.

மெய்கண்ட சந்தான சபை, சென்னை.

சைவ சமயாபிவிருத்தி சபை, செங்கற்பட்டு.

சைவசித்தாந்த சபை, கட்டியாம்பந்தல்.

சைவசித்தாந்த சபை, திருக்கோவலூர்.

சைவசித்தாந்த சபை, உத்திரமேரூர்.

சைவசித்தாந்த சபை, பூவாளூர்.

பால விக்னேஸ்வர சங்கம், பெங்களூர்.

சிந்தாமணி விநாயக பக்தஜன சபை, செம்பியம், பிரப்பூர்.

மெய்கண்டார் சபை, (தெய்வச்சேக்கிழார் புத்தகசாலை), செம்பியம் பிரப்பூர்.

ஸ்ரீ சொர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, சேலம்.

சிவனடியார் திருக்கூட்டம், ஆலந்தூர்.

வாகீச பக்தஜன சபை, விழுப்புரம்.

ஸ்ரீ சன்மார்க்க சபை, ஜலகண்டபுரம்.

ஸ்ரீ பிருஹத் கருணாம்பிகை சைவசித்தாந்த சபை, அவிநாசி.

சைவசித்தாந்த ஸ்ரீ பரமாசாரிய பக்தஜன சபை, தேர்த்துறை.

சண்முகானந்த சபை, தாரமங்கலம், சேலம்.

ஸ்ரீ கலியாணசுந்தர பக்தஜன சபை, மாணம்பதி.

ஓர் வேண்டுகோள்.

சென்னைமாநகரின்கண்ணே ஏனைய கேவலாத்துவிதப், விசிட்டாத்துவிதம் முதலிய தத்துவ நூலாராய்ச்சிக்குரிய கல்லூரிகள் செல்வமான்களது பேருதவியால் எளிதிலே நிலையிடப்பட்டு நடைபெறா நிற்பவும் இத்தமிழ்நாடு தோன்றிய காலந்தொட்டுச் சைவநன்மக்கட்கு மதித்தற்கரிய புனிதாத்துவித சைவசித்தாந்தத்துக்கு அனையதோர் கல்விமாடம் இதுவரையமையாதிருத்தல் சைவரென்பார்களது அளவற்ற ஊக்கக் குறைவாலன்றோ? இத்தகைய கலாசாலையொன்று இராஜதானியின்கண்ணே அமைவதற்காக சமாஜ அறிஞர் பலர்முயன்றும் அவர்களது நன்னோக்கம் நிறைவேறுவதற்குரிய அமயம் இனிமேற்றான் வருவதுபோலும். இணையில்லாத பெரும்புண்ணியமாகிய இதனை எளிதில் இனிதாக முற்றுப்பெறும் வண்ணம் இயன்றவரை விடாமுயற்சி செய்வது சைவாபிமானிகள் யாவர்க்கும் ஒருதலையான கடமை என்பதைத் தாழ்வுடன் நினைவூட்டுவதோடு எங்கள் பெருங்கருத்து முடியும்வண்ணம் சிவபரம்பொருளாகிய முன்னோனது, திருவடித்தாமரையை முடிமேற் கொள்வாம்.

இங்ஙனம்,

சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாக சபையார்.

அக்கிராசனர்கள்.

1906—சிதம்பரம், கனம்-பொ. இராமநாதத் துரையவர்கள், K. C., C. M. G., கொழும்பு.

1907—சிதம்பரம், காலஞ்சென்ற பொ-பாண்டித்துரைசாமித் தேவரவர்கள், பாலவநத்தம ஜமீன்தார்.

1908—நாகபட்டினம், ஸ்ரீமான் J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், B. A., B. L., வக்கீல், மதுரை.

1909—திரிசிராப்பள்ளி, கௌரவ- அ. கனகசபைப் பிள்ளையவர்கள், B. A., அத்துவக்காத்து, யாழ்ப்பாணம்.

1910—இராமநாதபுரம், திவான்பகதூர் இராஜசபாபூஷணம், K. P. புட்டண்ண செட்டியார் அவர்கள், மைசூர் சமஸ்தானம்.

1911—சென்னை, ஸ்ரீமான் J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், B. A., B. L., வக்கீல், மதுரை.

1912—காஞ்சிபுரம், ஸ்ரீமான் T. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் M. R. A. S., Retired Excise Commissioner, Travancore.

1913—வேலூர், ஸ்ரீமத்-சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அதிபர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்.

1914—கூடலூர், ,, ,,

1915—தஞ்சை, ஸ்ரீமத்-அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

1916—திருமயிலாப்பூர், ஸ்ரீமான்-ச. சபாரத்தின முதலியார் அவர்கள், J.P Dy. Fiscal, Jaffna.

1917—பெரம்பூர்-செம்பியம், காலஞ்சென்ற சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள், சென்னை.

1918—திருக்குடந்தை, யாழ்ப்பாணத்து வண்ணைநகர்-ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள், சென்னை.

போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்.

ஸ்ரீமான் S R. M. Ct. பெத்தாச்சிச் செட்டியாரவர், M. R. A. S.

,, இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.

,, அ. நா. முத்தக்குமாரசாமிச் செட்டியாரவர்கள், கூடலூர்.

,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.

,, ஆண்டவராய விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார் அவர்கள், பாலையவனம் ஜமீன்தார்.

மத் அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமான்-தி. இராஜு கிராமணியார் அவர்கள், மயிலாப்பூர்.

,, புழலை-திருநாவுக்கரசு முதலியாரவர்கள், பிராகுடார், செம்பியம், பிரம்பூர்.

ஸ்ரீலஸ்ரீ-சுவாமிநாத பண்டிதர் அவர்கள், சென்னை.

சபைத்தலைவர்.

யாழ்ப்பாணத்து-வண்ணைநகர்-ஸ்ரீலஸ்ரீ, சுவாமிநாத பண்டிதரவர்கள்.

உதவி சபைத்தலைவர்.

ஸ்ரீமான் J.M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், B.A. B.L. High Cour[t] Vakil, மதுரை.

,, T. நல்லசிவம்பிள்ளையவர்கள், B.A., B.L. High Court Vakil, சென்னை.

காரியதரிசி.

ஸ்ரீமான்-கா. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள், M.A., M.L. சென்னை.

பொக்கிஷதாரர்.

ஸ்ரீமான்-சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை.

பத்திராசிரியர்.

[ஸ்ரீ]மான்-வி. குப்புசாமி முதலியாரவர்கள்.

கணித பரிசோதகர்.

ஸ்ரீமான்-A.C. சண்முக நயினார் பிள்ளை அவர்கள், B.A., B.L.

,, ம. மாசிலாமணி முதலியார் அவர்கள், (Monthly Aubitor

உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான்-இராஜா இராமஸ்வாமியார் அவர்கள்.

,, புழுதி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்.

,, M. கந்தசாமி முதலியாரவர்கள், B.A.

,, W.T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள்.

,, ஆ. சிவப்பிரகாச முதலியாரவர்கள், B.A.

,, வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்கள்.

,, T.S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.

,, C. ஏகாம்பர முதலியாரவர்கள்,

,, R.P. சேதுப்பிள்ளையவர்கள், B.A., B.L.

,, C. முருகேச முதலியாரவர்கள்.

வெளியூர் நிர்வாக சபையார்-

ஸ்ரீமான்-T-A-இராமலிங்கம் செட்டியாரவர்கள், B. A, B L, கோயம்புத்தூர்.

,, T-S, சாமிநாதப்பிள்ளையவர்கள், திரிசிரபுரம்.

,, S சபாரத்தின முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.

,, இராஜவேலு முதலியார் அவர்கள், B. A., வேலூர்

மறைத்திருவன்-விருதை-சிவஞானயோகிகள், கோயில்பட்டி.

ஸ்ரீமான்-பொ. நடேசமுதலியார் அவர்கள், செங்கற்பட்டு.

,, T-சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.

,, K-U-பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரன்மேரூர்.

,, M-R-குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.

,, J-சாமிநாதப்பிள்ளையவர்கள், பெங்களூர்.

,, A-R- அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.

பிரமஸ்ரீ-சிரிவாசகுருக்கள் அவர்கள், சேலம்.

ஸ்ரீமான்-P-C. முருகேச முதலியாரவர்கள், காஞ்சீபுரம்.

,, P-முத்தையபிள்ளையவர்கள், தூத்துக்குடி.

,, S-பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.

,, S-மெய்கண்ட பிள்ளையவர்கள், நாகை.

,, E-சாமிநாதப்பிள்ளையவர்கள், வேதமடம்.

,, M-வேலுசாமித்தேவர் அவர்கள், இராமநாதபுரம்.

,, A-T-முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள், கூடலூர்.

,, P-L-இராமசாமி நாய்க்கர் அவர்கள், மிட்டாதார், பாகல்பட்டி.

,, K-S-P. கோடிலிங்கம் செட்டியார் அவர்கள், கும்பகோணம்.

,, K-முத்துக்கன்னிவேலுச் செட்டியாரவர்கள், வாலாஜாபாத்.

வனிதையர் வகுப்புக் காரியதரிசி

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

பதினான்காவது வருடத்திய வரவு செலவு கணக்கு

ஸ்ரீ வரவு.	தொகை. ரூ.	அ.	ப.	செலவு.	தொகை. ரூ.	அ.	ப.
(ஆயுள் சமாசிகர் சந்தாவில்) 1918ஞ டிசம் பர்மீ 1உ இருப்பு	118	8	10	விகிதர் சம்பளம்	175	0	0
சமாசிகர் வருட சந்தா	549	14	0	காகிதம்	185	8	0
ஆயுள் சமாசிகர் சந்தா	15	0	0	அச்சுக்கூலி	161	5	0
புத்தக விற்பனை	18	1	0	தபால் செலவு முதலியன	152	3	9
பழைய பிரதிகள் விற்பனை	6	1	0				
விளம்பர விகிதம்	14	8	0		674	0	9
நன்கொடை	25	0	0	(ஆயுள் சமாசிகர் சந்தாவில்) 1919ஞ நவம் பர்மீ 30உ இருப்பு	76	14	8
சேவிங்ஸ் பாங்கி வட்டி	8	14	7				
மொத்தம் ...	750	15	5	* மொத்தம் ...	750	15	5

* இதில் ஆயுள் சமாசிகர் சந்தா.. 620

K. SUBRAHMANIAM, Secretary. C. V. JAMBULINGAM, Treasurer. M. MASILAMONY MUDALIAR Auditor.

I audited the accounts and found the same to be correct.

A. C. SHANMUKHA NAINAR,
High Court Vakil, Annual Auditor.
8—12—19.